SHAPE WORKBOOK

எஜமானுக்கு உபயோகமான பாத்திரம்

தேவன் உங்களை வடிவமைத்த விதத்தைக் கண்டறியும் பயணம்

"...எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்."

— 2 தீமோத்தேயு 2:21



S	H	A	P	E
ஆவிக்குரிய வரங்கள்	விருப்பம்	திறன்கள்	ஆளுமை	அனுபவங்கள்

TRANSLATED & ADAPTED BY

Praison Timothy

உள்ளடக்கம்

பெயர் _____

சபை / ஊழியம் _____ தேதி _____

தொடங்கும் முன் — சமையலறையில் ஒரு பாடம் · பயன்படுத்தும் முறை **பக்கங்கள் 3–4**

1 Session 1
தொடக்கமும் ஆவிக்குரிய வரங்களும்
நான் யார்? (தொடக்க நிலை) · ஐந்து உண்மைகள் · பாத்திரங்கள் · 133 வாக்கியத் தேர்வு · வர வரைபடம்
பக்கங்கள் 5–20

2 Session 2
H — விருப்பம்
என்னை இயக்குவது · நான் கரிசனை கொள்பவர்கள் · தேவைகள் · சமூகப் பிரச்சனைகள் · என் கனவு
பக்கங்கள் 21–23

3 Session 3
A — திறன்கள்
45 திறன்கள் · முதல் ஐந்து திறன்கள் · வரம் + விருப்பம் + திறன்
பக்கங்கள் 24–26

4 Session 4
P — ஆளுமை
பழகும் விதம் · வாய்ப்புகளுக்குப் பதிலளிக்கும் விதம் · எனக்கு ஏற்ற சூழல்
பக்கங்கள் 27–28

5 Session 5
E — அனுபவங்கள் + என் S.H.A.P.E.
இனிய & வேதனையான அனுபவங்கள் · திருப்புமுனைகள் · சுருக்கம் · 90 நாள் திட்டம் · உறுதிப்படுத்தல் · நிறைவு
பக்கங்கள் 29–35

வரவேற்பு

சமையலறையில் ஒரு பாடம்



ஒரு சமையலறையில் சிறு கரண்டியும் பெரிய பாத்திரமும், டம்ளரும் சல்லடையும் உண்டு. ஒவ்வொன்றும் வெவ்வேறு வடிவம், வெவ்வேறு நேரம், வெவ்வேறு பயன்; ஆனால் எல்லாவற்றுக்கும் ஒரே நோக்கம் — மற்றவர்களுக்குப் பரிமாறுவது.

சிறு கரண்டி முதல் பெரிய பாத்திரம் வரை — எல்லாம் பரிமாறுவதற்கே.

> தேவனுடைய வீட்டிலும் அப்படியே: பொன், வெள்ளி, மரம், மண் — பல பாத்திரங்கள் உண்டு; தன்னைச் சுத்திகரித்துக்கொள்பவன் எஜமானுக்கு உபயோகமான, எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமான பாத்திரமாயிருப்பான்.
>
> **— 2 தீமோத்தேயு 2:20–21 (சுருக்கம்)**

S.H.A.P.E. — ஐந்து கேள்விகள், ஒரே வடிவம்

S	**ஆவிக்குரிய வரங்கள்** Spiritual Gifts	நான் என்ன வேலைகளைச் செய்ய ஆண்டவர் கிருபை அளித்திருக்கிறார்?
H	**விருப்பம்** Heart	எதைச் செய்ய என் உள்ளம் வாஞ்சிக்கிறது?
A	**திறன்கள்** Abilities	மற்றவரை விட நான் சிறப்பாகச் செய்யக்கூடிய காரியங்கள் என்ன?
P	**ஆளுமை** Personality	தேவன் என்னை எவ்வாறு உருவாக்கியிருக்கிறார்?
E	**அனுபவங்கள்** Experiences	நான் கடந்து வந்த பாதைகள் என்ன? அவற்றிலிருந்து கற்ற பாடங்கள் என்ன?

இந்த நூலைப் பயன்படுத்தும் முறை

ஆறு எளிய வழிகாட்டுதல்கள்

> ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.
>
> **— எபேசியர் 2:10**

1 ஜெபத்தோடு தொடங்குங்கள

"ஆண்டவரே, நீர் என்னை எப்படி உருவாக்கினீர் என்று எனக்குக் காட்டும்."

2 "இருக்க வேண்டியதை" அல்ல, "இருப்பதை" எழுதுங்கள்

மற்றவர்கள் எதிர்பார்க்கும் பதில் அல்ல; உண்மையில் நீங்கள் யார் என்பதே முக்கியம்.

3 அனுபவத்தை வைத்துப் பதில் சொல்லுங்கள்

இதுவரை செய்யாத ஊழியத்தைப் பற்றி உறுதியாகத் தெரியவில்லையென்றால் குறைந்த மதிப்பெண் (0 அல்லது 1) கொடுங்கள். வரங்களைக் கண்டுபிடிக்கச் சிறந்த வழி — சேவை செய்யத் தொடங்குவதே.

4 உங்கள் வேகத்தில்

அவசரம் வேண்டாம். தனியாகவோ, ஒரு குழுவாக ஐந்து Sessions-ஆகவோ செய்யலாம்.

5 தனியுரிமை

"அனுபவங்கள்" பகுதியில் வரும் வேதனையான நினைவுகள் உங்களுடையவை. விரும்புவதை மட்டும் எழுதுங்கள்; யாரிடம் பகிர்வது என்பது உங்கள் முடிவு.

6 உறுதிப்படுத்துங்கள்

முடித்த பின், உங்களை நன்கு அறிந்த இருவரிடம் (போதகர், வாழ்க்கைத் துணை, நண்பர்) காட்டி அவர்கள் கருத்தைக் கேளுங்கள் (பக்கம் 34).

இந்த நூலில் உள்ள குறியீடுகள்

- Personal Work
- Group Discussion
- வேத வசனம்
- ஜெபம்
- நோக்கம்
- என் குறிப்புகள்

SESSION 1

பக்கங்கள் 5–20

தொடக்கமும் ஆவிக்குரிய வரங்களும்

இந்த Session-இன் நோக்கம்

நான் இன்று எங்கே இருக்கிறேன் என்று நேர்மையாகப் பார்த்து, பரிசுத்த ஆவியானவர் எனக்கு அருளிய வரங்களைக் கண்டறியத் தொடங்குதல்.

Reflect & Discuss

1. சபையில் “பெரிய பாத்திரம்” மட்டுமே முக்கியம் என்று நினைத்த அனுபவம் உண்டா? ஏன் அப்படி நினைக்கிறோம்?
2. தேவன் உங்களுக்கு ஒரு வரம் கொடுத்திருக்கிறார் என்று எப்போதாவது உணர்ந்திருக்கிறீர்களா? எப்போது?
3. உங்களிடம் ஒரு வரம் இருப்பதை முதலில் கவனித்தது நீங்களா, மற்றவர்களா?

> அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்.
>
> **— 1 பேதுரு 4:10**

என் குறிப்புகள்

S — H — A — P — E

Section 1

நான் யார்?

என் தொடக்க நிலை

பாத்திரங்கள் அலமாரியில் அழகுக்காக வைக்கப்படுவதற்கல்ல; பயன்படுத்தப்படுவதற்கே செய்யப்பட்டவை.

நம்மை நாமே ஆய்ந்தறிதல் அவசியம். நாம் எதற்காக, எவ்விதமாய்ப் படைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அறியும்போதுதான் தேவனுடைய ராஜ்யத்தில் நம் பங்கு என்ன என்பதை உணர முடியும்.

> அவனவன் தன்தன் சுயகிரியையையைச் சோதித்துப்பார்க்கக்கடவன்; அப்பொழுது மற்றவனைப் பார்க்கும்போதல்ல, தன்னையே பார்க்கும்போது மேன்மைபாராட்ட அவனுக்கு இடமுண்டாகும். அவனவன் தன்தன் பாரத்தைச் சுமப்பானே.
>
> **— கலாத்தியர் 6:4–5**

I என் வாழ்க்கையைப் பெரும்பாலும் தீர்மானிப்பது எது? (ஒன்றைக் குறியுங்கள்)

☐

கூட்டத்தைப் பின்பற்றுபவர்

(மந்தை மனப்பான்மை)

எல்லோரும் செய்வதையே நானும் செய்வேன்; பிரபலமானதையே செய்வேன்.

☐

கைதட்டலுக்காக வாழ்பவர்

(மக்களைத் திருப்திப்படுத்தும் மனப்பான்மை)

எல்லாரும் என்னைப் பாராட்ட வேண்டும் என்று காரியங்களைச் செய்வேன்.

☐

கர்த்தரின் திட்டத்தைத் தேடுபவர்

ஆண்டவரின் திட்டம் என்ன என்பதை முதலில் அறிந்து செயல்படுவேன்.

II நான் எப்படிப்பட்டவன்? (ஒன்றைக் குறியுங்கள்)

☐

பெற்றுக்கொள்பவர்

எப்போதும் எதையாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே என் நோக்கம்.

☐

பார்த்துக்கொண்டிருப்பவர்

ஓரத்திலிருந்து வேடிக்கை பார்க்கிறேன்; இந்த வாழ்வை நிம்மதியாகக் கடத்திவிட்டால் போதும்.

☐

பகிர்ந்தளிப்பவர்

மற்றவர்களுக்கு எதையாவது கொடுக்க வேண்டும், செய்ய வேண்டும் என்பதே என் நோக்கம்.

தயக்கமில்லாமல் நேர்மையாகக் குறியுங்கள். இது மதிப்பெண் அல்ல — பயணம் எங்கிருந்து தொடங்குகிறது என்று பார்க்கும் கண்ணாடி.

III இன்றைக்கு நான் எங்கே இருக்கிறேன்?

எல்லாப் பயணத்திற்கும் ஒரு தொடக்கம் உண்டு. இதுதான் நீங்கள் யார் என்று கண்டறியும் “வாழ்வை மாற்றும்” பயணத்தின் துவக்கம். ஒவ்வொரு வாக்கியத்திற்கும் ஒரு எண்ணை வட்டமிடுங்கள்: **3 = ஆம், 2 = இருக்கலாம் / நினைக்கிறேன், 1 = இல்லை.**

#	வாக்கியம்	ஆம்	இருக்கலாம்	இல்லை
1	என் வாழ்வைக் குறித்த தேவனின் தனித்துவமான நோக்கத்தைக் குறித்துத் தெளிவாக உள்ளேன்.	3	2	1
2	என் ஆவிக்குரிய வரங்கள் வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன.	3	2	1
3	என் வாஞ்சைகள் தேவனுக்காகப் பயன்பட்டுக்கொண்டிருக்கின்றன.	3	2	1
4	என் இயற்கையான திறன்கள் மற்றவர்களுக்குச் சேவை செய்வதற்காகப் பயன்பட்டுக்கொண்டிருக்கின்றன.	3	2	1
5	என் குணநலன்கள் மற்றவர்களுக்குச் சேவை செய்ய எனக்கு உதவுகின்றன.	3	2	1
6	என் வாழ்வின் நோக்கம் நான் கடந்து செல்லும் பல்வேறு அனுபவங்கள் மூலம் உறுதிசெய்யப்படுகிறது.	3	2	1
7	என் வாழ்க்கை முழுவதும் தேவனிடத்தில் அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது.	3	2	1
8	என் செயல்பாடுகளும் அணுகுமுறையும் என்னில் இருக்கும் பணிவிடையின் இருதயத்தை வெளிப்படுத்துகின்றன.	3	2	1
9	என் வாழ்க்கையைக் குறித்து மற்றவரிடம் சீராகக் கணக்குக் கொடுத்துவருகிறேன்.	3	2	1
10	நான் மற்றவர்களிடம் என்னை எவ்வளவு முதலீடு செய்கிறேன் என்பதை ஒவ்வொரு நாளும் நான் செய்யும் திட்டம் வெளிப்படுத்துகிறது.	3	2	1
11	என் வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக தேவனிடத்தில் திட்டத்தை உறுதியாகப் பெற்றிருக்கிறேன்.	3	2	1
	மொத்தம் (11–33)			

என் மதிப்பெண் எங்கே விழுகிறது?

11–18 · தொடக்கம்	19–26 · பாதி வழி	27–33 · தெளிவான பாதை
பரவாயில்லை — இந்தப் பயிற்சி அதற்காகவே. ஒவ்வொரு பகுதியையும் மெதுவாக, ஜெபத்தோடு செய்யுங்கள்.	சில பகுதிகள் தெளிவு, சில இன்னும் மறைவு. “1” வந்த வாக்கியங்களைக் கவனியுங்கள் — அவைதான் அடுத்த வளர்ச்சியின் இடம்.	உங்கள் வடிவம் பெரும்பாலும் தெரியும்; இந்தப் பயிற்சி அதைக் கூர்மைப்படுத்தி, மற்றவர்களை வழிநடத்த உதவும்.

S — ஆவிக்குரிய வரங்கள்

நான் என்ன வேலைகளைச் செய்ய ஆண்டவர் கிருபை அளித்திருக்கிறார்?

எஜமான் இந்தப் பாத்திரத்தை எதற்காகச் செய்தார்? கரண்டியில் சமைப்பதில்லை; பெரிய பாத்திரத்தால் பரிமாறுவதில்லை. அவைகள் எதற்காக வடிவமைக்கப்பட்டிருக்கின்றனவோ, அதற்காகவே பயன்படுத்தப்படுகின்றன.

ஆவிக்குரிய வரங்கள் நமக்காகவோ நம்முடைய நோக்கத்திற்காகவோ அல்ல; சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்தை **ஆசீர்வதிக்கும்** நோக்கத்திற்காகவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை ஒவ்வொரு விசுவாசியும் பெற்றுக்கொள்கிறார். பரிசு கையில் இருந்தாலும் திறக்கப்படாவிட்டால் பயனில்லை — இந்தப் பகுதி அந்தப் பரிசைத் திறக்க உதவும்.



ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய ஐந்து உண்மைகள்

1. **இரட்சிப்புக்குப் பின்பே.** திறன்கள் முதல் பிறப்பில் வருகின்றன; ஆவிக்குரிய வரங்கள் மறுபிறப்பில் வருகின்றன. இயேசுவை கர்த்தர் என்று அறிக்கையிட்டு, ஆவியானவரைப் பெற்ற விசுவாசிக்கே இவை அருளப்படுகின்றன.
   — 1 கொரி 12:1–3; எபே 4:7–8

2. **பரிசுத்த ஆவியானவரே பகிர்ந்தளிக்கிறார்.** வரத்தை நாம் தேர்ந்தெடுப்பதில்லை; அவர் தமது சித்தத்தின்படி ஒவ்வொருவருக்கும் பகிர்ந்து கொடுக்கிறார்.
   — 1 கொரி 12:4, 11

3. **ஒவ்வொருவருக்கும்.** சிலருக்கு மட்டுமல்ல; ஒவ்வொரு விசுவாசிக்கும் குறைந்தது ஒரு வரமாவது உண்டு. பதவியோ பட்டமோ தேவையில்லை.
   — 1 கொரி 12:7; எபே 4:7; 1 பேது 4:10

4. **பரிமாறுவதற்காக.** நம் பெருமைக்காக அல்ல; சபையின் பொதுநன்மைக்காகவும், மற்றவர்களுக்குச் சேவை செய்வதற்காகவுமே கொடுக்கப்படுகின்றன.
   — 1 கொரி 12:7; எபே 4:12; 1 பேது 4:10

5. **திறக்கப்பட வேண்டும்.** பரிசு கையில் இருந்தாலும் திறக்கப்படாவிட்டால் பயனில்லை. உன்னில் உள்ள வரத்தை அசட்டைப்பண்ணாமல், அனல்மூட்டி எழுப்பு.
   — 1 தீமோ 4:14; 2 தீமோ 1:6

> அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்.
>
> — 1 பேதுரு 4:10

நான் எந்த சமையலறைப் பாத்திரம்?

Discussion · Score இல்லை

நீங்கள் எந்தப் பாத்திரத்தைப் போல இருக்கிறீர்கள்? ஒன்றையோ இரண்டையோ குறித்து, ஏன் என்று குழுவில் பகிருங்கள். இது மதிப்பெண் அல்ல; உரையாடலைத் தொடங்க மட்டுமே. உண்மையான தேர்வு அடுத்த பக்கத்தில்.

☐

கரண்டி

ஒவ்வொருவருக்கும் தேவையான அளவு அக்கறையுடன் பரிமாறுகிறார்

மேய்ப்பர்

☐

மிக்ஸி

கடினமானதை அரைத்து, மற்றவர்கள் ஏற்கக்கூடியதாக மாற்றுகிறார்

போதித்தல்

☐

சல்லடை

நல்லதையும் கல்லையும் பிரித்துப் பார்க்கிறார்

பகுத்தறிவு

☐

பெரிய பாத்திரம்

பலருக்கும் இடம் கொடுத்து, எல்லோரையும் போஷிக்கிறார்

விருந்தோம்பல்

☐

டம்ளர்

தாகமாயிருக்கிற ஒருவருக்கு ஒரு குவளை தண்ணீர் கொடுக்கிறார்

இரக்கம்

☐

கேஸ் லைட்டர்

முதல் நெருப்பை மூட்டுகிறார்

நற்செய்தி அறிவித்தல்

☐

மைக்ரோவேவ் ஓவன்

ஆறிப்போனதை மீண்டும் சூடாக்குகிறார்

ஊக்கமளித்தல்

☐

அடுப்பு

தேவையான வெப்பத்தைக் கொடுத்து, முழு சமையலையும் முன்னே நடத்துகிறார்

தலைமைத்துவம்

☐

அளவுக் கோப்பை

எல்லாம் சரியான அளவில், ஒழுங்காக நடக்கச் செய்கிறார்

நிர்வாகம்

☐

ஃப்ரிட்ஜ்

பலவற்றைச் சேமித்து, ஒவ்வொன்றையும் அதனதன் இடத்தில் கெடாமல் வைத்திருக்கிறார்

அறிவாற்றல்

☐

உப்பு

சிறிது சொல்லியே சூழ்நிலைக்குச் சுவை சேர்க்கிறார் (கொலோ 4:6)

ஞானம்

☐

அரிசி டப்பா

தேவை வரும்போது அள்ளிக் கொடுக்க எப்போதும் நிரம்பியிருக்கிறார்

கொடுத்தல்

☐

கைத்துணி

சூடான பாத்திரத்தைப் பிடித்து, துடைத்து, யாரும் கவனிக்காமல் உதவுகிறார்

உதவிசெய்தல்

☐

கத்தி

தேவையானதை வெட்டி, பிரித்து, தெளிவாக்குகிறார் (எபி 4:12)

தீர்க்கதரிசனம்

☐

டிஃபன் பாக்ஸ்

சமையலறையைத் தாண்டி, புதிய இடங்களுக்கு உணவைக் கொண்டு செல்கிறார்

அப்போஸ்தலர்

☐

சப்பாத்திக் கட்டை

பச்சை மாவைத் தன் கைகளால் பயனுள்ள வடிவமாக்குகிறார்

கைத்திறன்

☐

பரிமாறும் தட்டு

உணவை அழகாக முன்வைத்து, சாப்பிடத் தூண்டுகிறார்

கலைவழித் தொடர்பு

☐

பிரஷர் குக்கர்

வெப்பத்திலும் அழுத்தத்திலும் உறுதியாக நின்று, விசில் வரும் வரை காத்திருக்கிறார்

விசுவாசம்

☐

ஃபிளாஸ்க்

யாரும் பார்க்காமல், நீண்ட நேரம் சூட்டைக் காத்து வைக்கிறார்

பரிந்து பேசுதல்

வேறு பாத்திரம்?

உங்களைப் போன்ற ஒரு பாத்திரத்தை வரைந்து, பெயரிடுங்கள்.

I. வரங்கள் — Self Test

வாக்கியங்கள் 1–13 / 133

ஒவ்வொரு வாக்கியமும் உங்கள் வாழ்க்கையில் எவ்வளவு உண்மை என்பதை எண்ணால் எழுதுங்கள். “இருக்க வேண்டியதை” அல்ல, நீங்கள் உண்மையில் செய்வதையும் உணர்வதையும் வைத்துப் பதில் சொல்லுங்கள்; ஒரு வாக்கியத்தில் அதிக நேரம் நிற்க வேண்டாம்.

Score: **3 = எப்போதும் உண்மை** **2 = பெரும்பாலும் உண்மை** **1 = சில சமயம் மட்டும்** **0 = ஒருபோதும் இல்லை**

#	வாக்கியம்	0–3
1	நான் மக்கள், வேலைகள் (பணிகள்), நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நிர்வகிக்க விரும்புவேன்.	
2	நான் ஆலயங்கள் தற்போது இல்லாத இடங்களில் சபைகள் ஆரம்பிக்க விரும்புவேன்.	
3	நான் மரம், துணி, பெயிண்ட், உலோகம், கண்ணாடி மற்றும் பிற பொருட்களைக் கொண்டு புதிதான கைவேலைகள் செய்வதில் மகிழ்ச்சி அடைவேன்.	
4	நான் பற்பல கலைகளை வைத்து, பயன்படுத்தி மக்களை அவர்கள் தேவனைப் பார்க்கும் கண்ணோட்டத்திற்கு சவால் விடுவேன்.	
5	என்னால் ஆவிக்குரிய சத்தியம் மற்றும் தவறுகள், நன்மை மற்றும் தீமை ஆகியவற்றை எளிதில் வேறுபடுத்த முடியும்.	
6	நான் மக்களிடம் உள்ள திறன்களை அறிய முயற்சிப்பேன்.	
7	நான் சுவிசேஷத்தை தெளிவாகவும், மிகுந்த பலன் தரும் வகையிலும் அறிவிப்பேன்.	
8	நான் இயற்கையாக, எளிதாக தேவன் என் ஜெபங்களுக்கு பதில் தருவார் என நம்புவேன்.	
9	நான் பொருளாதாரத் தேவை மற்றும் இலக்குகளை அடைய உதவி தேவையுள்ள மக்களுக்கு தாராளமாக சந்தோஷமாக கொடுப்பேன்.	
10	நான் பிறருக்கான வேலைகளில் அவர்களுக்காக யாரும் அறியா வண்ணம் பின்புலமாக இருந்து வேலை செய்து உதவுவதில் மகிழ்ச்சி அடைவேன்.	
11	என்னுடைய வீடு ஊழிய உதவித் தேவைப்படும் மக்களுக்கான ஒரு இடமாகத் திகழ வேண்டும் என்பது என் பார்வையாகும்.	
12	நான் ஜெப உதவி தேவைப்படும் நபர்களுக்கு ஜெப விண்ணப்பங்கள் பெற்று, தொடர்ந்து அவர்களுக்காக இடைவிடாமல் ஜெபிப்பேன்.	
13	வேதாகமத்திலுள்ள சத்தியம் மற்றும் அதின் குறிப்பிட்ட பகுதியில் காணும் உண்மை பற்றிய என்னுடைய கண்ணோட்டம் பற்றி மக்கள் அறிய விரும்பி என்னை அணுகுகின்றனர்.	

Self Test — தொடர்ச்சி

Score: 3 = எப்போதும் உண்மை | 2 = பெரும்பாலும் உண்மை | 1 = சில சமயம் மட்டும் | 0 = ஒருபோதும் இல்லை

#	வாக்கியம்	0–3
14	நான் பிறர் தங்கள் இலக்குகளை அடைய அவர்களை ஊக்கப்படுத்துகிறேன்.	
15	காயப்பட்ட மக்களின் மேல் பரிவு காட்டி, அவர்களின் காயங்களிலிருந்து ஆரோக்கியம் பெற உதவி செய்ய விரும்புகிறேன்.	
16	பிறர் பாவ உணர்வடைந்து, மனந்திரும்பி, பாவமில்லா தூய வாழ்க்கை வாழ்வதற்கேற்ற முறையில் நான் அவர்களுடன் பேசுவேன்.	
17	பிறரை போஷிப்பதிலும், விசாரிப்பதிலும் என் நேரத்தை செலவிட்டு மகிழ்கிறேன்.	
18	தேவ பணியை தேவனுடைய கிரியையை பிறருக்கு திறமையாக தொடர்பு கொள்ளச் செய்வேன்.	
19	பிறரின் ஆவிக்குரிய, தனிப்பட்ட பிரச்சனைகளுக்காக அடிக்கடி ஆலோசனை தரும்படி நாடப்படுகிறேன்.	
20	தகவல்களை இயக்கும் போது மிகவும் ஜாக்கிரதையாக முழுமையாக, திறமையாக செயல்படுகிறேன்.	
21	பிற நாடுகள் அல்லது பிற இன மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும் யோசனையால் கவரப்படுகிறேன்.	
22	பல்வேறு வகையான கருவிகளைக் கொண்டு வேலை செய்வதில் நான் திறமை பெற்றுள்ளேன்.	
23	நான் என் கலைத்திறனை (கலை, நாடகம், இசை, போட்டோ எடுத்தல்...) மேம்படுத்தவும், பயன்படுத்தவும் மகிழ்ச்சியாக உள்ளேன்.	
24	ஒரு மனிதரின் தன்மையை அவரைப் பார்த்த முதல் பார்வையில் எடை போட, நிதானிக்க அடிக்கடி முயல்கிறேன்.	
25	மனசோர்வுற்றோரை மீண்டும் தைரியப்படுத்தி, பெலப்படுத்துவதில் மகிழ்கிறேன்.	
26	நான் மீண்டும், மீண்டும் இடைவிடாமல் கிறிஸ்தவர் அல்லாத பிறமக்களோடு நட்பு கொள்வதற்கான தருணத்திற்கு காத்திருக்கிறேன்.	
27	கடினமான சூழ்நிலைகளிலும், தேவனுடைய பராமரிப்பும், உதவியும், அனுகூலமும் எனக்குக் கிடைக்கும் என்று திட நம்பிக்கை கொண்டுள்ளேன்.	
28	தேவ இராஜ்ஜிய வேலைகள் செய்து முடிக்கப்படுவதற்காக, தசம பாகத்தை விட அதிகம் கொடுக்கிறேன்.	

Self Test — தொடர்ச்சி

Score: 3 = எப்போதும் உண்மை | 2 = பெரும்பாலும் உண்மை | 1 = சில சமயம் மட்டும் | 0 = ஒருபோதும் இல்லை

#	வாக்கியம்	0–3
29	ஊழியத்திற்கு உதவியாக உள்ள அனுதினப்பணிகளை செய்வதில் மகிழ்கிறேன்.	
30	புதிய நபர்களை சந்தித்து, அவர்களை வரவேற்று உதவி செய்வதில் ஆனந்தம் அடைகிறேன்.	
31	நான் அதிக நேரம் ஜெபத்தில் காத்திருந்து, தேவன் நான் எதற்காக ஜெபிக்க வேண்டும் என்று வழிநடத்தும் ஜெபம் செய்வதில் மகிழ்கிறேன்.	
32	இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் ஆவியானவரிடம் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்கிறேன்.	
33	பிறரை தரிசனம் பெற்றுக் கொள்ள தூண்டுகிறேன்.	
34	தங்கள் வாழ்க்கையை நிலைப்படுத்துவதற்காக, வேதனையான அனுபவங்களின் ஊடே கடந்து செல்பவருக்கு, பொறுமையுடன் உதவுவேன்.	
35	பிறருக்கு சத்தியத்தை அறிவிப்பது, பிறர் சத்தியத்தை உணர்ந்து, சத்திய வழியில் நடப்பதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன் என உணர்கிறேன்.	
36	நிலையற்ற விசுவாசிகளுக்காக பாரப்படுகிறேன். அவர்களை காப்பாற்ற விரும்புகிறேன்.	
37	சத்தியம் மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டு வரும் என அறிந்து, அதற்காக நேரமெடுத்து படிக்கிறேன்.	
38	சண்டைகள், குழப்பங்கள் மத்தியில் எளிதான, நடைமுறை தீர்வுகளை அடிக்கடி நான் கண்டுள்ளேன்.	
39	நான் இலக்குகளைப் பற்றிய தெளிவுடன், திட்டங்களை, முன்னேற்றி நடைமுறைப்படுத்தியுள்ளேன்.	
40	புதிய சபை உருவாக்கத்திற்காக நான் மிகப் பெரும் முயற்சியெடுத்துள்ளேன்.	
41	ஊழியத்திற்கு உபயோகப்படுத்தும் உபகரணங்கள் செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.	
42	கலைத்திறன் வாயிலாக மக்கள் தங்களைப் பற்றியும், தங்கள் உறவுகள், தேவனைப் பற்றியும் சிறப்பான முறையில் அறிந்து கொள்ள புரிந்து கொள்ள உதவுவேன்.	
43	பிறருக்குத் தெரியும் முன்பே வஞ்சகம் அல்லது ஏமாற்று வேலையை முன்பே கண்டறிய என்னால் முடியும்.	

Self Test — தொடர்ச்சி

Score: 3 = எப்போதும் உண்மை | 2 = பெரும்பாலும் உண்மை | 1 = சில சமயம் மட்டும் | 0 = ஒருபோதும் இல்லை

#	வாக்கியம்	0–3
44	பிறரை தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கு நேராய் வழிநடத்தி அவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுப்பேன்.	
45	தனிப்பட்ட மனிதரின் தேவைகள் சந்திக்கப்படத்தக்கதாக நற்செய்தியை விசேஷித்த திறன் கொண்டு அறிவிக்கும் முறையை பின்பற்றுவேன்.	
46	பெரிய காரியங்களைச் செய்து முடிப்பதற்கு தேவன் எனக்கு உதவி செய்வார் என்று நம்பிக்கையாக இருப்பேன்.	
47	என் பணத்தை சிறந்த முறையில் நிர்வகித்து அதன் பெரும்பகுதியை கொடுப்பதற்கு பயன்படுத்துவேன்.	
48	ஆலயத்தை (சபையை) சுற்றிலும் காணப்படுகிற வித்தியாசமான வேலைகளை பிறர் தேவைகளை சந்திப்பதற்காகச் சந்தோஷமாய் செய்வேன்.	
49	கர்த்தர் நான் முன் பின் அறியாத நபர்களை என் மூலம் பிறருடன் தொடர்பு கொள்ள, ஐக்கியப்பட வழிநடத்துகிறார் என உண்மையாக நம்புகிறேன்.	
50	நான் ஜெபிக்கும் போது பிறருக்கு ஊழியம் செய்ய கருத்தும் உணர்வும் உள்ளவனாயிருக்கிறேன்.	
51	நான் வேதத்தை வாசிக்கவும், படிக்கவும், வேத வசனத்தின் சத்தியத்தை முழுமையாகவும், துல்லியமாகவும் புரிந்து கொள்ள, அறிந்து கொள்ள என்னையும் என் நேரத்தின் முக்கிய பங்கினையும் அர்ப்பணித்துள்ளேன்.	
52	பிறரிடம் உள்ள சிறந்ததை வெளிக் கொணர என் தலைமைத்துவப் பண்பை மாற்றிக்கொள்வேன்.	
53	சில சமயங்களில் உதவி பெற தகுதியற்றவர்கள் அல்லது உதவி பெற இயலாதவர்களுக்கு உதவி செய்து மகிழ்வேன்.	
54	வேதாகம சத்தியங்களுக்கு விரோதமான கலாச்சார சீரழிவுகள், போதனைகள், நிகழ்ச்சிகளை துணிச்சலாக எதிர்ப்பேன்.	
55	நான் ஒரு நபரின் முழுமைக்கும் அதாவது அவரது உறவில், உணர்ச்சி சம்பந்தமான மற்றும் ஆவிக்குரிய அனைத்து பகுதிகளிலும் வழிகாட்டி உதவ விரும்புகிறேன்.	
56	நான் புதிய வேதாகம சத்தியங்களைக் கற்றுக் கொண்டு அதை பிறருடன் பகிர்ந்து கொள்ளவும் நேரம் ஒதுக்குவேன்.	
57	பற்பல காரியங்களின் தெரிவுகளில் மிகவும் சிறப்பானதை எளிதாக தெரிவு செய்வேன்.	
58	வளங்களைத் தெளிவாக கண்டுணர்ந்து அவற்றை பணிகளை நிறைவேற்றி முடிப்பதற்கு சிறப்பான முறையில் பயன்படுத்துவேன்.	

Self Test — தொடர்ச்சி

Score: 3 = எப்போதும் உண்மை | 2 = பெரும்பாலும் உண்மை | 1 = சில சமயம் மட்டும் | 0 = ஒருபோதும் இல்லை

#	வாக்கியம்	0–3
59	பல்வேறுபட்ட கலாச்சார, சுற்றுச்சூழல்களுக்கேற்ப என்னை மாற்றி தயார் செய்து கொள்வேன்.	
60	ஒரு காரியம் கட்டி எழுப்பப்படுமுன் அது எவ்வாறு கட்டப்பட வேண்டும் என மனதில் வரைபடம் வரைந்து தீர்மானித்துக் கொள்வேன்.	
61	கர்த்தரின் சத்தியங்களை அறிவிக்க புதிதும், உத்தமமான வழிகளை கண்டுபிடிப்பேன்.	
62	ஒரு சூழலில் சரியானது எது, தவறானது எது என காண விழைவேன்.	
63	தங்கள் விசுவாசம், குடும்பம், வாழ்க்கை, ஆகியவற்றில் தைரியமான முடிவு எடுக்க வேண்டிய நபர்களுக்கு மீண்டும் உறுதி கூறுவேன்.	
64	அவிசுவாசிகளை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் அழைப்பேன்.	
65	மனித முயற்சிகள் மூலம் மட்டும் வெற்றி பெற இயலாத சூழ்நிலைகளில் தேவனை நம்புவேன்.	
66	என் வாழ்க்கை முறையை மாற்றி என் வருமானத்தில் பெரும் சதவீதத்தை கொடுக்க சவாலாக ஏற்றுள்ளேன்.	
67	நடைமுறை பணிகளை செய்வதில் ஆவிக்குரியவை முக்கியத்துவம் பெறுவதைக் காண்கிறேன்.	
68	மக்கள் தனிமையை உணராத அளவில் இருக்கக் கூடியதாக ஒரு இடத்தை உருவாக்க விரும்புகிறேன்.	
69	தேவன் ஜெபத்திற்கு பதில் அளிக்கிறவர் என்பதை நான் அறிந்திருப்பதால், தைரியமாய் ஜெபிக்கிறேன்.	
70	எனக்கு ஒரு காரியம் உண்மையானது என்பதைக் குறித்த உள்ளுணர்வு (அல்லது) அறிவு கிடைத்துள்ளது.	
71	நான் இலக்குகளை நிர்ணயித்து அதை அடைந்து தீர, மனிதர்களையும், வளங்களையும் திறமையாக கையாளுகின்றேன்.	
72	காயமுற்ற மக்களுக்காக மிகுந்த பரிவு கொண்டுள்ளேன்.	
73	நான் நிறைய செயல்களை சரியா அல்லது தவறா என பகுத்தறிந்து, தவற்றை திருத்த வேண்டும் என உணர்த்தப்படுகின்றேன்.	

Self Test — தொடர்ச்சி

Score: 3 = எப்போதும் உண்மை | 2 = பெரும்பாலும் உண்மை | 1 = சில சமயம் மட்டும் | 0 = ஒருபோதும் இல்லை

#	வாக்கியம்	0–3
74	நான் உதவி தேவைப்படுவோருக்கு நீண்ட கால உதவி செய்வேன். பிறரைப் பற்றிய கரிசனையோடு இருப்பேன்.	
75	வேதாகமத்தை ஒழுங்கும் கிரமமாக வாசிக்க விரும்புவேன்.	
76	தனிநபர் அல்லது குழு நடத்தைகளின் விளைவுகளை முன்னமே எதிர்பார்த்து செயல்படுவேன்.	
77	நிறுவனங்கள் அல்லது குழுக்களுக்கு அவை மிகவும் திறமையாக செயல்பட உதவி செய்வேன்.	
78	கலாச்சார உணர்வுகளின் வழியில் தொடர்பு கொண்டு பிறரை புரிய வைப்பேன்.	
79	கர்த்தரை, தேவனை என் கைவினை பொருட்கள் செய்யும் ஆற்றலால் (தாலந்துகளால்) கனப்படுத்துவேன்.	
80	தேவனுடைய சத்தியத்தை விளக்க பற்பல கலைகளின் வழியை பயன்படுத்துவேன்.	
81	என் உள்ளுணர்வு, அல்லது தரிசனங்கள் ஆகியவற்றின் நம்பகத் தன்மையை உறுதி செய்து கொள்ள பிறரின் உறுதிப்படுத்துதலை பெற்றுக் கொள்வேன்.	
82	விசுவாசத்தில் அலசடிப்படுவோரின் உள்ளங்களை பெலப்படுத்துவேன்.	
83	நான் 'கிறிஸ்தவன்' என்று வெளிப்படையாகக் கூறி, அவர்கள் என் விசுவாசத்தைப் பற்றி என்னிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புவேன்.	
84	அனுதினம் என் வாழ்வில் பெறும் தேவ பிரசன்னத்திலும், தேவனுடைய கிரியையிலும் திருப்தியாக வாழ்வேன்.	
85	தேவனுடைய ஜனங்களின் வாழ்க்கை மற்றும் ஊழியங்களில் என்னால் செய்யப்படும் பொருளாதார உதவி எவ்வித தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை அறிய விரும்புவேன்.	
86	அடிக்கடி செய்யப்படவேண்டிய சிறுகாரியங்கள், யாரும் கேட்காமலே செய்யப்பட அவற்றை கண்டுபிடிக்க பிரயாசப்படுவேன்.	
87	நான் மக்களை மகிழ்விக்கவும் பிறருக்கு உதவ என் வீட்டுக் கதவுகள் எப்பொழுதும் திறந்திருக்கவும் விரும்புவேன்.	
88	தேவையான சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகள் குறித்து கேள்விப்படும் போது அதற்காக ஜெபிக்கப் பாரப்படுவேன்.	

Self Test — தொடர்ச்சி

Score: 3 = எப்போதும் உண்மை | 2 = பெரும்பாலும் உண்மை | 1 = சில சமயம் மட்டும் | 0 = ஒருபோதும் இல்லை

#	வாக்கியம்	0–3
89	சிலரைப் பற்றி யாரும் சொல்லாமலேயே சில காரியங்கள் எனக்குத் தெரியவருகின்றன; அவை எப்படித் தெரிந்தன என்று எனக்கே தெரியாது.	
90	நான் பிறரின் ஆளுமைத் திறம் முழுமையாக பயன்படுத்தி அவர்கள் அரிய செயல்களை செய்ய உந்து சக்தியாய் இருப்பேன்.	
91	ஒரு நபரின் ஊனமுற்ற தன்மையோ அல்லது பிற பிரச்சனைகளுக்கோ, அப்பாற்பட்டு தேவன் அவர் வாழ்க்கையை இடைப்பட்டு பெரிய காரியங்களைச் செய்ய வல்லவர் என்பதை காண்பேன்.	
92	நேர்மையாய் நடந்து, உண்மை பேசுபவர்களை விரும்புவேன்.	
93	சிறு குழு மக்களுக்கு நான் ஆலோசனை கூறி, வழிகாட்டி, நடைமுறை உதவிகள் செய்வதில் சந்தோஷம் அடைவேன்.	
94	நான் வேத வசனத்தை பிறர் படிக்கவும், அதிகமாக தெரிந்து கொள்ள ஆர்வம் ஏற்படும் வகையிலும் அவர்களுக்கு விளக்குவேன்.	
95	மிக மோசமான, கடினமான, குழப்பமான சூழ்நிலைகளில் பிறர் செல்லும் போது நல்ல நடைமுறை ஆலோசனைகளை அளிப்பேன்.	
96	ஸ்தாபனங்கள் (நிறுவனங்கள்) எவ்வாறு செயலாற்றுகின்றன என்பன பற்றி கற்றுக் கொள்வதில் மகிழ்ச்சி அடைவேன்.	
97	புதிய காரியங்களை எடுத்து செயல்படுத்துவதில் முதன்மையாகத் திகழ விரும்புவேன்.	
98	என் சொந்த கைகளால் வேலை செய்ய விரும்புவேன்.	
99	நான் புதிய காரியத்தை உருவாக்குவதிலும் கற்பனைத் திறனிலும் ஆற்றல் பெற்றுள்ளேன்.	
100	வேதத்திற்கு புறம்பான பிரசங்கம், போதனை, உறவுமுறை ஆகியவற்றை கண்டறிந்து விடுவேன்.	
101	நான் பிறரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தேவையான உற்சாகமூட்டி, எழுப்பி விடுவேன்.	
102	இயேசு கிறிஸ்து எனக்கு செய்தவற்றை நான் வெளிப்படையாக உறுதியாக பிறருக்கு அறிவிப்பேன்.	
103	நான் முறையாக தேவனை நம்பும்படி பிறருக்கு சவால்விட்டு கூறுவேன்.	

Self Test — தொடர்ச்சி

Score: 3 = எப்போதும் உண்மை | 2 = பெரும்பாலும் உண்மை | 1 = சில சமயம் மட்டும் | 0 = ஒருபோதும் இல்லை

#	வாக்கியம்	0–3
104	தேவனுடைய வேலைக்கு என் பணத்தையும் பொருளையும் மனப்பூர்வமாய், சந்தோஷமாய்க் கொடுப்பேன்.	☐
105	பிறர் தங்கள் பணிகளை செவ்வனே செய்ய நான் ஒரு உதவியாளராக இருப்பதில் பெருமகிழ்வு அடைவேன்.	☐
106	தாங்கள் முக்கியமானவர்கள், பிறருக்குத் தேவைப்படுபவர்கள், பிறருக்கு சொந்தமானவர்கள் என மக்கள் நினைப்பதற்கு தேவையானவற்றைச் செய்வேன்.	☐
107	தங்களுக்காக ஜெபிக்க என்னை மக்கள் நாடி வரும்போது கனப்படுத்தப்படுகிறேன்.	☐
108	நான் வேத வசனங்களை வாசிக்கும் போது அல்லது படிக்கும் போது கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களான பிறருக்கும் பிரயோஜனம் ஏற்படும் வகையில் வேதாகம சத்தியங்களை கண்டு அறிந்து கொள்கின்றேன்.	☐
109	பிறரும் பங்கு கொள்ளும் வகையில் தரிசனத்தைப் பெற்று கொள்கிறேன்.	☐
110	பற்பல சூழ்நிலைகளில் வாழும் மக்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் கொண்டு வருவதில் மகிழ்கின்றேன்.	☐
111	வேத சத்தியங்களைப் பற்றி அறிவில்லாத அல்லது அதை ஏற்றுக் கொள்ள இயலாத மக்கள் வாழும் கடினமான இடங்களிலும் வேத சத்தியங்களையே பேசுவேன்.	☐
112	நான் மிகவும் அன்பாக அமைதியாக, நிதானமாக உறுதியில்லாத விசுவாசிகளை விசுவாசத்திலும், ஐக்கியத்திலும் நிலைநிறுத்துவேன்.	☐
113	நான் தேவ செய்திகள், திறன்கள், தகவல்களை மக்கள் எளிதில் புரிந்து, தங்கள் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்தக் கூடிய அளவில் வெளிப்படுத்துவேன்.	☐
114	ஆவிக்குரிய சத்தியங்களை பிறர் நடைமுறை வாழ்வில் பயன்படுத்தவும், உதவவும் சிறந்தவை என எண்ணும் வகையில் அவற்றை செயல்படுத்துவேன்.	☐
115	பின்வரும் காரியங்களை தரிசித்து, வரப்போகும் பிரச்சனைகளை எதிர்பார்த்து, முன்பே அதற்குரிய திட்டங்களை தீட்டி அவற்றை எதிர்கொள்வேன்.	☐
116	பல சபை ஊழியங்களை பொறுப்பெடுத்து, அவற்றை கண்காணிக்கவும் திறமை பெற்றுள்ளேன்.	☐
117	நான் திருச்சபைக்கு உதவும் வகையில் வடிவமைத்து காரியங்களை நிறைவேற்றுவேன்.	☐
118	என் கற்பனைத் திறனை வளர்க்க, அடிக்கடி தனிமையாக அமர்ந்து சிந்திக்க வேண்டியது எனக்கு அவசியம்.	☐

Self Test — தொடர்ச்சி

வாக்கியங்கள் 119–133 / 133

Score: **3 = எப்போதும் உண்மை** | **2 = பெரும்பாலும் உண்மை** | **1 = சில சமயம் மட்டும்** | **0 = ஒருபோதும் இல்லை**

#	வாக்கியம்	0–3
119	சத்துருவின் போராட்டம் ஒரு தனிநபர் வாழ்விலோ அல்லது சூழ்நிலையிலோ காணப்படும் போது அதை பகுத்தறிவேன்.	☐
120	ஆவிக்குரிய வளர்ச்சிக்கு விரோதமாக உள்ளவற்றை எதிர்த்து நிற்கவும், சவால் விடவும் செய்வேன்.	☐
121	அவிசுவாசிகளுடன் ஆவிக்குரிய காரியங்களை பகிர்ந்து கொள்ள நல்ல சந்தர்ப்பங்களை (தருணங்களை) ஆவலோடு எதிர்பார்த்து காத்திருப்பேன்.	☐
122	ஒரு காரியம் செய்வதற்கு தேவனுடைய ஆசீர்வாதத்தை உணரும் போது, யாரும் உதவ முன் வராவிட்டாலும் அந்த காரியத்தை செய்வதில் முன்னேறுவேன்.	☐
123	கர்த்தருடைய வேலையைச் செய்யும்படி எனக்கு அபரிமிதமாக வளங்களை, வசதிகளை, தேவன் தந்துள்ளார் என விசுவாசிப்பேன்.	☐
124	நான் துரிதமாக, சந்தோஷமாக என் இயற்கையான மற்றும் கற்றறிந்த திறமைகளை தேவைப்படும் இடத்தில் பயன்படுத்துவேன்.	☐
125	பழக்கமில்லாத இடத்தில் கூட மக்களை நான் சந்தோஷமாக உணரும்படி செய்வேன்.	☐
126	நான் அதிகமதிகமாய் முக்கியமான பதில்களை (விளைவுகளை) என் ஜெபங்களுக்கு பதிலாக பெற்றுக் கொள்கிறேன்.	☐
127	நான் தைரியமாக என் உள்ளுணர்வையும், கர்த்தரைப் பற்றிய அறிவையும் பிறருடன் பகிர்ந்து கொள்வேன்.	☐
128	தேவையுள்ள இடங்களை கண்டறிந்து, பிறரையும் அவ்விடங்களுக்கு உதவி செய்ய வழிநடத்தி செய்ய முடிகிறது.	☐
129	தேவைப்பட்ட மக்களுக்கு நடைமுறை பயிற்சி அளிப்பதில் மகிழ்கின்றேன்.	☐
130	பாவத்தை வெளிப்படையாக கண்டித்து, மக்களை பாவங்களிலிருந்து மனந்திரும்ப சவால்விட வேண்டும் என கண்டிப்பாக உணர்கின்றேன்.	☐
131	விசுவாசிகளாக சாதாரண மக்களை பொறுமையுடன், திடமனதாக, உறுதியாக விசுவாச வாழ்க்கையில் முன்னேற்றமடையச் செய்ய தேவையான அனைத்து ஆவிக்குரிய உணவுகளைக் கொடுத்து தேற்ற விரும்புகிறேன்.	☐
132	மக்கள் ஆவிக்குரிய ரீதியாகவும், ஆளுமைத்திறன், கொண்டவர்களாகவும் வளர, அவர்களுக்கு காரியங்களை விளங்கக் காட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.	☐
	பிறர் காணக்கூடாத பிரச்சனைகளுக்கான தீர்வு காணக்கூடிய உள்ளுணர்வைப்	☐

முடித்துவிட்டீர்கள்! அடுத்த பக்கத்தில் ஒவ்வொரு வரத்திற்கும் உரிய 7 வாக்கியங்களின் மதிப்பெண்களைக் கூட்டி, உங்கள் வர வரைபடத்தை நிரப்புங்கள்.

II Score & என் Gifts Chart

ஒவ்வொரு வரிசையிலும் உள்ள 7 வாக்கியங்களின் மதிப்பெண்களைக் கூட்டி “மொத்தம்” கட்டத்தில் எழுதுங்கள் (அதிகபட்சம் 21). பிறகு அதே அளவு கட்டங்களை வலப்பக்கம் வண்ணமிடுங்கள் — உங்கள் வர வரைபடம் தயார்.

வரம்	வாக்கிய எண்கள்	மொத்தம்	3 6 9 12 15 18 21
A நிர்வாகம் Administration	1 · 20 · 39 · 58 · 77 · 96 · 115		
B அப்போஸ்தலர் Apostleship	2 · 21 · 40 · 59 · 78 · 97 · 116		
C கைத்திறனோடு செயல்படுதல் Craftsmanship	3 · 22 · 41 · 60 · 79 · 98 · 117		
D கலைவழித் தொடர்பு Creative Communication	4 · 23 · 42 · 61 · 80 · 99 · 118		
E பகுத்தறிவு Discernment	5 · 24 · 43 · 62 · 81 · 100 · 119		
F ஊக்கமளித்தல் Encouragement	6 · 25 · 44 · 63 · 82 · 101 · 120		
G நற்செய்தி அறிவித்தல் Evangelism	7 · 26 · 45 · 64 · 83 · 102 · 121		
H விசுவாசம் Faith	8 · 27 · 46 · 65 · 84 · 103 · 122		
I கொடுத்தல் Giving	9 · 28 · 47 · 66 · 85 · 104 · 123		
J உதவிசெய்தல் Helps	10 · 29 · 48 · 67 · 86 · 105 · 124		
K விருந்தோம்பல் Hospitality	11 · 30 · 49 · 68 · 87 · 106 · 125		
L பரிந்து பேசுதல் Intercession	12 · 31 · 50 · 69 · 88 · 107 · 126		
M அறிவாற்றல் Knowledge	13 · 32 · 51 · 70 · 89 · 108 · 127		
N தலைமைத்துவம் Leadership	14 · 33 · 52 · 71 · 90 · 109 · 128		
O இரக்கம் Mercy	15 · 34 · 53 · 72 · 91 · 110 · 129		
P தீர்க்கதரிசனம் Prophecy	16 · 35 · 54 · 73 · 92 · 111 · 130		
Q மேய்ப்பர் Shepherding	17 · 36 · 55 · 74 · 93 · 112 · 131		
R போதித்தல் (கற்பித்தல்) Teaching	18 · 37 · 56 · 75 · 94 · 113 · 132		
S ஞானம் Wisdom	19 · 38 · 57 · 76 · 95 · 114 · 133		

☆ நீளமான மூன்று பட்டைகளே உங்கள் முதன்மை வரங்களாக இருக்கலாம். அவற்றை அடுத்த பக்கத்தில் எழுதுங்கள்.

III இந்தத் தேர்வு அளவிடாத வரங்கள்

அந்நிய பாஷைகள், வியாக்கியானம், குணமாக்குதல், அற்புதங்கள் ஆகிய வரங்கள் மேலுள்ள தேர்வில் இல்லை. இவை ஜெபத்தின் மூலமும், சபையின் உறுதிப்படுத்தலின் மூலமும் பகுத்தறியப்படுகின்றன (1 கொரி 12:7–11; 14:29).

வரம்	அடையாளம்	ஆம்	இருக்கலாம்	இல்லை
அந்நிய பாஷைகள் (Tongues) · 1 கொரி 12:10; 14:27	சபைக் கூடுகையில், வியாக்கியானத்துடன் கூடிய அந்நிய பாஷைச் செய்தி கொடுக்க ஆவியானவர் என்னைப் பயன்படுத்துகிறார்.	☐	☐	☐
வியாக்கியானம் (Interpretation) · 1 கொரி 12:10	சபையில் சொல்லப்படும் அந்நிய பாஷைச் செய்தியின் பொருளை ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்துகிறார்.	☐	☐	☐
குணமாக்குதல் (Healing) · 1 கொரி 12:9	வியாதியஸ்தருக்காக ஜெபிக்க வலுவான உந்துதல்; என் ஜெபத்தின் மூலம் தேவன் சுகம் கொடுத்ததைக் கண்டிருக்கிறேன்.	☐	☐	☐
அற்புதங்கள் (Miracles) · 1 கொரி 12:10	இயலாத சூழல்களில் தேவனுடைய வல்லமை வெளிப்பட ஜெபிக்கிறேன்; மகிமையை தேவனுக்கே செலுத்துகிறேன்.	☐	☐	☐

> **குறிப்பு:** ஆவியின் அபிஷேகத்தின் அடையாளமாக விசுவாசிகளுக்கு அருளப்படும் ஜெப பாஷையும் (அப் 2:4), சபையின் பக்திவிருத்திக்கான அந்நிய பாஷை வரமும் வேறுபட்டவை; இங்கே இரண்டாவதை மட்டும் குறியுங்கள்.

IV என் முதல் மூன்று வரங்கள்

1

வரம் _____

இந்த வரத்தை இப்போது / இனி எப்படிப் பயன்படுத்துவேன்? _____

2

வரம் _____

இந்த வரத்தை இப்போது / இனி எப்படிப் பயன்படுத்துவேன்? _____

3

வரம் _____

இந்த வரத்தை இப்போது / இனி எப்படிப் பயன்படுத்துவேன்? _____

V நான் சிக்கியிருக்கக்கூடிய கண்ணி எது? (நம்பகமானவர்களிடம் கணக்குக் கேளுங்கள் — பக்கம் 34)

☐ **ஒப்பிடுதல்** — மற்றவர்களின் வரங்களோடு என்னை ஒப்பிட்டு, என் வரத்தைக் குறைவாக எண்ணுகிறேன் (1 கொரி 12:21–22).

☐ **சுயத்தை முன் நிறுத்துதல்** — நான் நன்றாகச் செய்வதை மற்றவர்களும் என்னைப் போலவே செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

☐ **ஏற்றுக்கொள்ளாமை** — பதவியோ பட்டமோ இல்லாததால், தேவன் கொடுத்த வரத்தை ஏற்க மறுக்கிறேன்.

☐ **வஞ்சிக்கப்படுதல்** — தேவன் கொடுக்காத வரம் எனக்கு உண்டு என்று நினைத்து, உண்மையான வரத்தை விட்டுவிடுகிறேன்.

SESSION 2

பக்கங்கள் 21–23

H — விருப்பம்

இந்த Session-இன் நோக்கம்

தேவன் என் உள்ளத்தில் வைத்த வாஞ்சையையும் பாரத்தையும் — யாருக்காக, எதற்காக — அடையாளம் காணுதல்.

Reflect & Discuss

1. எந்தக் காட்சி அல்லது செய்தி உங்களை அழவைக்கிறது? ஏன்?
2. எந்த மக்களைப் பார்க்கும்போது, அவர்களுக்கு உதவ உங்கள் உள்ளம் ஏங்குகிறது?
3. பணமோ தடையோ இல்லையென்றால், தேவனுக்காக நீங்கள் செய்ய விரும்பும் ஒரு காரியம் என்ன?

> கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்.
>
> **— சங்கீதம் 37:4**

என் குறிப்புகள்

S — H — A — P — E

H — விருப்பம்

எதைச் செய்ய என் உள்ளம் வாஞ்சிக்கிறது?

பாத்திரம் எதால் நிரம்பியிருக்கிறதோ, அதையே மற்றவர்களுக்குக் கொண்டு செல்லும்.

வரம் சொல்லும்:
“நான் என்ன செய்யலாம்”

விருப்பம் சொல்லும்:
“எங்கே, யாருக்காக”

நேரம் போவதே தெரியாமல் நீங்கள் செய்யும் காரியங்கள், உங்களை அழவைக்கும் காட்சிகள் — இவை உங்கள் விருப்பத்தின் அடையாளங்கள்.

> கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்.
>
> **— சங்கீதம் 37:4**

I என்னை இயக்குவது எது?

ஒரு மாதம் முழுவதும் தேவனுக்காக மட்டும் செலவழிக்க முடிந்தால் என்ன செய்வேன்? எந்த விஷயத்தைப் பற்றிப் பேசும்போது என் உள்ளம் உற்சாகமடைகிறது?

II நான் யாருக்காகக் கரிசனை கொள்கிறேன்? (மூன்றைக் குறியுங்கள்)

- ☐ குழந்தைகள்
- ☐ வளரிளம் பருவத்தினர் (13–19)
- ☐ கல்லூரி மாணவர்கள்
- ☐ வாலிபர் / இளம் பணியாளர்கள்
- ☐ புதிதாகத் திருமணமானவர்கள்
- ☐ குடும்பங்கள் / பெற்றோர்
- ☐ பெண்கள்
- ☐ ஆண்கள்
- ☐ முதியோர்
- ☐ விதவைகள் / தனித்து வாழ்பவர்கள்
- ☐ புதிய விசுவாசிகள்
- ☐ இரட்சிக்கப்படாத நண்பர்கள் / அயலார்
- ☐ சுவிசேஷம் கேளாத கிராமங்கள்
- ☐ வியாதியஸ்தர் / மருத்துவமனை
- ☐ மாற்றுத்திறனாளிகள்
- ☐ போதைக்கு அடிமையானவர்கள்
- ☐ கைதிகள்
- ☐ புலம்பெயர் தொழிலாளர்கள்
- ☐ ஊழியர்கள் / போதகர்கள்
- ☐ வேலை செய்யும் இடத்தில் உள்ளவர்கள்
- ☐ மற்றவர்: _____

என் விருப்பமும் பாரமும்

III நான் சந்திக்க விரும்பும் தேவைகள் எவை?

முதல் இரண்டைக் குறியுங்கள். தேவன் உங்கள் வாழ்க்கையில் சந்தித்த தேவைகளிலிருந்து தொடங்குவது நல்லது (2 கொரி 1:4).

- ☐ **ஆவிக்குரிய** — மக்கள் கிறிஸ்துவை அறியவும், அவரில் வளரவும் உதவுதல்
- ☐ **சரீர / நடைமுறை** — உணவு, உடை, இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகள்
- ☐ **உறவு** — கிறிஸ்துவை மையமாகக் கொண்ட நல்ல உறவுகளை உருவாக்குதல், மக்களை இணைத்தல்
- ☐ **மன / உணர்வு** — காயப்பட்டவர்களுக்குச் செவிகொடுத்து, தேற்றி, கிறிஸ்துவில் அவர்கள் யார் என்று உணரவைத்தல்
- ☐ **கல்வி** — கற்றுக்கொடுத்து, வாழ்க்கைக்குத் தேவையான அறிவைக் கொடுத்தல்
- ☐ **தொழில் / வேலை** — மக்கள் தங்கள் திறனை வளர்த்து, வேலையில் முன்னேற பயிற்சியும் வழிகாட்டுதலும்

IV நான் எதிர்த்துப் போராட விரும்பும் சமூகப் பிரச்சனை எது?

உங்கள் உள்ளத்தை அதிகமாக அழவைக்கும் ஒன்றைக் குறியுங்கள்.

- ☐ குடிப்பழக்கம் / போதை
- ☐ குடும்ப உடைவு / திருமணப் பிரச்சனைகள்
- ☐ கல்வி இடைநிற்றல்
- ☐ வறுமை / பசி
- ☐ வேலையின்மை
- ☐ பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான கொடுமை
- ☐ சாதியப் பாகுபாடு
- ☐ மாணவர் மன அழுத்தம்
- ☐ மொபைல் / ஆபாசப் படங்களுக்கு அடிமைத்தனம்
- ☐ முதியோர் புறக்கணிப்பு
- ☐ ஆவிக்குரிய அசட்டை
- ☐ சுவிசேஷம் கேளாத கிராமங்கள்
- ☐ மனநலம் / மனச்சோர்வு
- ☐ கடன் சுமை
- ☐ வரதட்சணை / திருமணச் செலவுச் சுமை
- ☐ சுகாதாரம் / நோய்
- ☐ சுற்றுச்சூழல் / படைப்பைக் காத்தல்
- ☐ மற்றவை: _____

V தேவனுடைய ராஜ்யத்திற்காக என் பெரிய கனவு

_____

_____

_____

☆ “எப்படி?” என்று கேட்காதீர்கள்; “என்ன?” என்று மட்டும் எழுதுங்கள். “எப்படி” என்பது தேவனுடைய பகுதி.

SESSION 3

பக்கங்கள் 24–26

A — திறன்கள்

இந்த Session-இன் நோக்கம்

தேவன் தந்த இயற்கைத் திறன்களைக் கண்டறிந்து, அவற்றை அவருடைய பணிக்கு அர்ப்பணித்தல்.

Reflect & Discuss

1. சமையல், தையல், கணக்கு — இவை எப்படி ஊழியமாக முடியும்? ஒரு உதாரணம் சொல்லுங்கள்.
2. செய்யமுடிந்தும் உங்களைச் சோர்வடையச் செய்யும் வேலை எது?
3. மற்றவர்கள் உங்களிடம் அடிக்கடி உதவி கேட்கும் ஒரு காரியம் எது?

வாசிக்க: யாத்திராகமம் 31:1–5 — பெசலெயேலின் கைத்திறன்

என் குறிப்புகள்

S — H — **A** — P — E

A — திறன்கள்

மற்றவரை விட நான் சிறப்பாகச் செய்யக்கூடிய காரியங்கள் என்ன?



பாத்திரம் எதால் செய்யப்பட்டது — எவர்சில்வர், பித்தளை, மண்; ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பயன் உண்டு.


திறன்கள் என்பவை பிறப்பிலோ, கற்றலின் மூலமோ தேவன் தந்த இயற்கையான தாலந்துகள். ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்ட, தேவன் பெசலெயேலைத் தம்முடைய ஆவியினால் நிரப்பி, கைத்திறனைக் கொடுத்தார் (யாத்திராகமம் 31:1–5). சமையல், தையல், கணக்கு, வாகனம் ஓட்டுதல் — எந்தத் திறனும் தேவனுடைய பணிக்கு சிறியதல்ல.

> நீங்கள் **நன்றாகச் செய்யும், விரும்பிச் செய்யும்** திறன்களை மட்டும் குறியுங்கள். செய்யமுடியும் ஆனால் சோர்வடையச் செய்யும் வேலைகளைக் குறிக்க வேண்டாம்.

- [ ] கற்பித்தல் / விளக்குதல்
- [ ] மேடையில் பேசுதல்
- [ ] பாடுதல்
- [ ] இசைக் கருவி வாசித்தல்
- [ ] எழுதுதல் (கட்டுரை, பாடல்)
- [ ] மொழிபெயர்த்தல்
- [ ] வரைதல் / வடிவமைத்தல்
- [ ] அலங்கரித்தல்
- [ ] சமையல் / உணவு பரிமாறுதல்
- [ ] தையல் / கைவேலை
- [ ] கட்டுமானம் / தச்சு / மின் வேலை
- [ ] பழுதுபார்த்தல்
- [ ] விவசாயம் / தோட்டம்
- [ ] வாகனம் ஓட்டுதல்
- [ ] கணக்கு / பண நிர்வாகம்
- [ ] கணினி / மொபைல் / இணையம்
- [ ] புகைப்படம் / வீடியோ / ஒலி
- [ ] சமூக ஊடகம்
- [ ] திட்டமிடுதல்
- [ ] நிகழ்ச்சி ஒழுங்கமைத்தல்
- [ ] மேற்பார்வை / நிர்வகித்தல்
- [ ] தலைமை தாங்குதல்
- [ ] ஊக்கப்படுத்துதல்
- [ ] செவிகொடுத்தல் / ஆலோசனை
- [ ] வழிகாட்டுதல் (Mentoring)
- [ ] பயிற்சியளித்தல் (Coaching)
- [ ] மக்களை இணைத்தல்
- [ ] வரவேற்றல் / விருந்தோம்பல்
- [ ] சமாதானம் செய்தல்
- [ ] விளம்பரம் / பிரச்சாரம்
- [ ] ஆராய்ச்சி / வாசித்தல்
- [ ] பகுப்பாய்வு செய்தல்
- [ ] புதியதைத் தொடங்குதல்
- [ ] கற்பனை / தரிசனம் காணுதல்
- [ ] மாற்றத்திற்கு ஏற்ப மாறுதல்
- [ ] பயணம் / புதிய இடங்கள்
- [ ] விளையாட்டு / போட்டி
- [ ] குழந்தைகளுடன் பழகுதல்
- [ ] முதியோர் / நோயாளிகளைப் பராமரித்தல்
- [ ] நாடகம் / கதை சொல்லுதல்
- [ ] பதிவேடு / ஆவணப்படுத்துதல்
- [ ] சுத்தம் / பராமரிப்பு
- [ ] நிதி திரட்டுதல்
- [ ] முதலுதவி / சுகாதாரம்
- [ ] மற்றவை: _____

நான் விரும்பிச் செய்யும் முதல் ஐந்து திறன்கள்

	திறன்	இதைச் சபையில் / சமூகத்தில் எப்படிப் பயன்படுத்தலாம்?
1		
2		
3		
4		
5		



மூன்றும் சந்திக்கும் இடம்

வரம் — நான் என்ன செய்யலாம்
விருப்பம் — எங்கே, யாருக்காக
திறன் — எதைக் கொண்டு, எப்படி

மூன்றும் சந்திக்கும் இடத்தில் ஊழியம் செய்யும்போது சோர்வு குறையும், பலன் கூடும். உங்கள் முதல் வரம், நீங்கள் கரிசனை கொள்ளும் கூட்டம், முதல் திறன் — மூன்றையும் கீழே இணைத்துப் பாருங்கள்.

என் முதல் வரம்	நான் கரிசனை கொள்ளும் கூட்டம்	என் முதல் திறன்

SESSION 4

பக்கங்கள் 27–28

P — ஆளுமை

இந்த Session-இன் நோக்கம்

தேவன் என்னை வடிவமைத்த விதத்தை நன்றியோடு ஏற்று, எனக்கு ஏற்ற ஊழியச் சூழலைக் கண்டறிதல்.

Reflect & Discuss

1. உங்கள் ஆளுமைக்குப் பொருந்தாத ஊழியத்தில் இருந்தபோது எப்படி உணர்ந்தீர்கள்?
2. உங்களுக்கு நேர் எதிரான ஆளுமை உள்ளவரோடு சேர்ந்து ஊழியம் செய்வது ஏன் நல்லது?
3. எந்தச் சூழலில் நீங்கள் சோர்வின்றி அதிகம் பலன் தருகிறீர்கள்?

> நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள்; அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்.
>
> **— சங்கீதம் 139:14**

என் குறிப்புகள்

S — H — A — **P** — E

P — ஆளுமை

தேவன் என்னை எவ்வாறு உருவாக்கியிருக்கிறார்?

பாத்திரத்தின் வடிவம் — அகலமானதோ குறுகியதோ, மூடியுடனோ திறந்ததோ; ஒவ்வொன்றும் தன் வேலைக்கே பொருந்தும்.

ஆளுமையில் “சரி” அல்லது “தவறு” இல்லை; தேவன் வேறுபாடுகளை விரும்புகிறார். ஒவ்வொரு வரிசையிலும் உங்களை அதிகம் விவரிக்கும் ஒரு வட்டத்தைக் குறியுங்கள்; நடு வட்டம் = இரண்டும் சமமாக.

> நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள்; அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்.
>
> **— சங்கீதம் 139:14**

I மற்றவர்களுடன் நான் பழகும் விதம்

வெளிப்படையானவர் (Outgoing) கூட்டத்தில் உற்சாகம் பெறுவேன்	○—○—○—○—○	**அமைதியானவர்** (Reserved) சிலருடன் ஆழமாக; தனிமையில் புத்துணர்ச்சி
உணர்வுகளை வெளிப்படுத்துபவர் (Self-expressive) எண்ணங்களை எளிதில் பகிர்வேன்	○—○—○—○—○	**உணர்வுகளைக் கட்டுப்படுத்துபவர்** (Self-controlled) நம்பிக்கை வந்த பின்பே திறப்பேன்
ஒத்துழைப்பவர் (Cooperative) சமாதானம் முக்கியம்	○—○—○—○—○	**போட்டியிடுபவர்** (Competitive) சவாலும் வெற்றியும் உற்சாகம்

II வாய்ப்புகளுக்கு நான் பதிலளிக்கும் விதம்

துணிச்சல் (High-risk) புதிய, நிச்சயமில்லாத வாய்ப்புகள் பிடிக்கும்	○—○—○—○—○	**பாதுகாப்பு** (Low-risk) தெளிவான, நிலையான சூழல் பிடிக்கும்
மனிதர்கள் (People) மக்களை நேரடியாகத் தொடும் ஊழியம்	○—○—○—○—○	**வேலைகள் / திட்டங்கள்** (Projects) திரைக்குப் பின் வேலைகள்
பின்பற்றுபவர் (Follow) நல்ல தலைவருக்குக் கீழ் சிறப்பாகச் செய்வேன்	○—○—○—○—○	**வழிநடத்துபவர்** (Lead) பொறுப்பை எடுத்து நடத்துவேன்
குழுவாக (Team) மற்றவர்களோடு சேர்ந்து	○—○—○—○—○	**தனியாக** (Solo) தனியாக சிறப்பாகச் செய்வேன்
ஒழுங்கான வழக்கம் (Routine) ஒரு வேலையை முடித்துவிட்டு அடுத்தது	○—○—○—○—○	**பலவகை** (Variety) பல வேலைகள் ஒரே நேரத்தில்

III என் ஆளுமை ஒரு வாக்கியத்தில், எனக்கு ஏற்ற ஊழியச் சூழல்

SESSION 5

பக்கங்கள் 29–35

E — அனுபவங்கள் + என் S.H.A.P.E.

இந்த Session-இன் நோக்கம்

தேவன் எதையும் வீணாக்குவதில்லை என்று உணர்ந்து, என் அனுபவங்களை ஊழியமாக மாற்றி, என் S.H.A.P.E. சுருக்கத்தையும் 90 நாள் திட்டத்தையும் எழுதுதல்.

Reflect & Discuss

1. உங்கள் வேதனையான அனுபவம் யாருக்கு ஆறுதலாக இருக்க முடியும்?
2. தேவன் ஒரு கடினமான அனுபவத்தை நன்மையாக மாற்றிய ஒரு சந்தர்ப்பத்தைச் சொல்லுங்கள் (விரும்பினால் மட்டும்).
3. இதுவரை செய்த ஊழியங்களில் எதில் அதிக நிறைவை உணர்ந்தீர்கள்? ஏன்?

> அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.
>
> **— ரோமர் 8:28**

என் குறிப்புகள்

S — H — A — P — **E**

E — அனுபவங்கள்

நான் கடந்து வந்த பாதைகள் என்ன? அவற்றிலிருந்து கற்ற பாடங்கள் என்ன?



புதிய இரும்புத் தோசைக்கல்லில் நல்ல தோசை வராது; வெப்பமும் பயன்பாடுமே அதைப் பக்குவப்படுத்துகின்றன. வாழ்க்கையின் நெருப்பும் தழும்புகளும் நம்மையும் அப்படியே ஆயத்தப்படுத்துகின்றன.

தேவன் எதையும் வீணாக்குவதில்லை; இனிமையான அனுபவங்களும் வேதனையான அனுபவங்களும் மற்றவர்களுக்கு உதவும் கருவிகளாக மாறலாம்.

> அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.
>
> **— ரோமர் 8:28**

I இனிமையான அனுபவங்கள் / சாதனைகள்

பகுதி	நினைவில் நிற்கும் அனுபவம்	இதன் மூலம் யாருக்கு, எப்படி உதவலாம்?
தனிப்பட்ட வாழ்க்கை		
குடும்பம் / உறவுகள்		
கல்வி / பயிற்சி		
வேலை / தொழில்		
ஆவிக்குரிய (இரட்சிப்பு, அபிஷேகம், ஊழியம்)		

II வேதனையான அனுபவங்கள்

இந்தப் பகுதி உங்களுக்கு மட்டுமே. எழுதத் தயாராக இல்லையென்றால் ஒரு சொல் மட்டும் எழுதி, அதை ஜெபத்தில் தேவனிடம் கொண்டு செல்லுங்கள். இன்னும் ஆறாத காயங்களுக்கு உங்கள் போதகரிடம் தனியாகப் பேசுங்கள்.

> தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்.
>
> **— 2 கொரிந்தியர் 1:4**

பகுதி	வேதனையான அனுபவம்	தேவன் என்னை எப்படிக் கடத்தினார்?	இதே வேதனையில் இருப்பவருக்கு எப்படி ஆறுதல் சொல்லலாம்?
தனிப்பட்ட வாழ்க்கை			
குடும்பம் / உறவுகள்			
கல்வி / பயிற்சி			
வேலை / தொழில்			
ஆவிக்குரிய			

III என் வாழ்க்கையின் மூன்று திருப்புமுனைகள்

ஒவ்வொன்றுக்கும் ஒரு தலைப்பு கொடுத்து, என்ன நடந்தது, எப்படி உணர்ந்தீர்கள் என்று சுருக்கமாக எழுதுங்கள். பாதை நேராக இல்லையென்றாலும், தேவன் ஒவ்வொரு திருப்பத்திலும் இருந்தார்.



1

தலைப்பு _____ **வயது** _____

என்ன நடந்தது, நான் எப்படி உணர்ந்தேன்

2

தலைப்பு _____ **வயது** _____

என்ன நடந்தது, நான் எப்படி உணர்ந்தேன்

3

தலைப்பு _____ **வயது** _____

என்ன நடந்தது, நான் எப்படி உணர்ந்தேன்

Section 7

என் S.H.A.P.E. — சுருக்கம்

இந்தப் பக்கம் ஒன்றே உங்கள் சுயவிவரம்



கழுவி, அலமாரியில் வைக்கப்பட்டு, எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக.

S — ஆவிக்குரிய வரங்கள்

என் முதன்மை ஆவிக்குரிய வரங்கள்

H — விருப்பம்

நான் யாருக்காக, எந்தத் தேவைக்காக, எந்தப் பிரச்சனைக்காகக் கரிசனை கொள்கிறேன்

A — திறன்கள்

நான் விரும்பிச் செய்யும் முதல் ஐந்து திறன்கள்

P — ஆளுமை

என் ஆளுமை, எனக்கு ஏற்ற ஊழியச் சூழல்

E — அனுபவங்கள்

நான் மற்றவர்களுக்கு உதவக்கூடிய அனுபவங்கள்

என் ராஜ்ய நோக்க வாக்கியம்

தேவன் எனக்கு _____ (வரங்கள் / திறன்கள்)

கொடுத்திருக்கிறார். இவற்றைக் கொண்டு நான் _____ (யாருக்கு)

_____ (எந்தத் தேவையை) சந்திக்கும்போது, தேவனுடைய

மகிமைக்காகவே நான் வாழ்கிறேன் என்ற நிறைவை உணருகிறேன்.

அடுத்த 90 நாட்கள்

அறிந்ததைச் செயலாக்கும்போதுதான் வடிவம் தெளிவாகும்



சிறிய, உறுதியான மூன்று அடிகளை எழுதுங்கள் — உதாரணமாக, சபையில் ஒரு ஊழியத்தில் நான்கு வாரங்கள் சோதனையாகச் சேவை செய்வது.

நாள் 1–30

என்ன செய்யப் போகிறேன்?

எப்போது?

யார் துணை?

நாள் 31–60

என்ன செய்யப் போகிறேன்?

எப்போது?

யார் துணை?

நாள் 61–90

என்ன செய்யப் போகிறேன்?

எப்போது?

யார் துணை?

9 மற்றவர்களின் உறுதிப்படுத்தல்

எந்தப் பாத்திரத்தை எடுக்க வேண்டும் என்று சமைப்பவருக்குத் தெரியும்; நம் பயனை நம்மைவிட மற்றவர்கள் முதலில் காண்பார்கள்.

உங்களை நன்கு அறிந்த இருவரிடம் இந்தச் சுருக்கத்தைக் காட்டுங்கள். அவர்கள் உங்களில் காணும் வரங்களையும் திறன்களையும் எழுதட்டும்.

பெயர்	உறவு	அவர்கள் என்னில் காணும் வரம் / திறன்	கையொப்பம்


போதகரின் குறிப்பு / பரிந்துரைக்கப்பட்ட ஊழியம்

நிறைவு

எல்லாவற்றுக்கும் அல்ல — இதற்கே!

கரண்டி பெரிய பாத்திரமாக மாற முயற்சிப்பதில்லை; அது கரண்டியாகவே நன்றாகப் பரிமாறுகிறது.

நாம் எல்லாவற்றையும் செய்ய அழைக்கப்படவில்லை; தேவன் நமக்கென்று வைத்த நோக்கத்தை நிறைவேற்றவே அழைக்கப்பட்டிருக்கிறோம். தாவீது தன் தலைமுறையில் தேவனுடைய நோக்கத்தைச் சேவித்து நித்திரையடைந்தார் (அப் 13:36). இயேசுவும் பிதா தமக்குக் கொடுத்த கிரியையைச் செய்து முடித்தார் (யோவான் 17:4).



சீகன்பால்கு (Ziegenbalg, 1683–1719)

செய்திருக்கக்கூடியவை: பல இடங்களுக்குச் சென்று, பல காரியங்களைச் செய்திருக்கலாம்

வாழ்வின் மையமாக்கிய ஒன்று: 1706-ல் தரங்கம்பாடி வந்து, தமிழ் மக்களுக்கு அவர்கள் சொந்த மொழியில் வேதத்தைக் கொடுப்பதையே மையமாக்கினார். 1714-ல் தமிழ் புதிய ஏற்பாடு அச்சானது. 35 வயதிலேயே மரித்தார்; ஆனால் இன்றும் நாம் தமிழில் வேதம் வாசிக்கிறோம்.

அன்னை தெரசா (1910–1997)

செய்திருக்கக்கூடியவை: உலகின் எந்த இடத்திற்கும் சென்று, பலவித மக்களுக்குச் சேவை செய்திருக்கலாம்

வாழ்வின் மையமாக்கிய ஒன்று: 1929-ல் இந்தியா வந்தார்; 1946-ல் "அழைப்புக்குள் ஒரு அழைப்பை"ப் பெற்று, கொல்கத்தாவின் ஏழைகளில் ஏழைகளுக்கு — மரிக்கும் நிலையில் இருந்தவர்களுக்கும், தொழுநோயாளிகளுக்கும் — தன் வாழ்வைக் கொடுத்தார்.

என் பாத்திரத்தை வரையுங்கள்

இப்போது நான் எந்தப் பாத்திரம்?

என் பாத்திரம் _____

ஏனெனில்...

_____

_____

என் பதில்: நான் எல்லாவற்றையும் செய்ய வேண்டியதில்லை. தேவன் என்னை அழைத்திருக்கும் “இந்த ஒன்று”:

_____

_____

_____

கையொப்பம் _____ **தேதி** _____

> **ஜெபம்:** ஆண்டவரே, எல்லாவற்றையும் அல்ல, நீர் எனக்குக் கொடுத்த வேலையை உண்மையாய்ச் செய்து முடிக்க எனக்கு உதவிசெய்யும். ஆமென்.



சிறு கரண்டி முதல் பெரிய பாத்திரம் வரை — எல்லாம் பரிமாறுவதற்கே.

தேவன் உங்களை ஒரு குறிப்பிட்ட பணிக்காக வடிவமைத்திருக்கிறார். ஆவிக்குரிய வரங்கள், விருப்பம், திறன்கள், ஆளுமை, அனுபவங்கள் — ஐந்து கோணங்களில் அந்த வடிவத்தைக் கண்டறிந்து, எஜமானுக்கு உபயோகமான பாத்திரமாக வாழ இந்த நூல் உதவுகிறது. தனியாகவும், ஒரு குழுவாக ஐந்து Sessions-ஆகவும் பயன்படுத்தலாம்.

Translated & adapted by Praison Timothy

Workshop-க்கு: +91 95003 92919 · stanley.praison@gmail.com

"இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்" (மத்தேயு 10:8). இது தேவனுடைய ராஜ்யத்திற்காக மட்டுமே; இலாப நோக்கமற்றது. பயன்படுத்தவும், அச்சிடவும், பகிரவும் தாராளமாய் உரிமை உண்டு; ஆனால் இலவசமாக மட்டுமே. எந்த வடிவிலும் விற்கவோ, பணம் சம்பாதிக்கப் பயன்படுத்தவோ கூடாது.

S.H.A.P.E. என்ற கருத்தை முதலில் ரிக் வாரன் அவர்கள் *The Purpose Driven Life* (Zondervan) நூலில் அறிமுகப்படுத்தினார்; எரிக் ரீஸ் அவர்கள் *S.H.A.P.E.: Finding and Fulfilling Your Unique Purpose for Life* (Zondervan) நூலில் அதை விரிவாக்கினார். இந்தப் பயிற்சி நூல் அந்தக் கட்டமைப்பைத் தழுவி தயாரிக்கப்பட்டது. ஆவிக்குரிய வரங்கள் தேர்வு — தமிழாக்கம்: Praison Timothy. வேத வசனங்கள்: TAOVBSI.

2 தீமோத்தேயு 2:21